LETTER

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt21134

# கம்பன் போற்றிய பெண்ணறம்

## மு. கவிதாதேவி [அ, *]

[அ] தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்- 641018, தமிழ்நாடு, இந்தியா.

# Feminity Adored by Kambar

## M. Kavitha Devi [a, *]

[a] Department of Tamil, Nirmala College for Women, Coimbatore - 641018, Tamil Nadu, India.

Corresponding Author: drkavithadevi10@gmail.com

Received : 02-12-2020
Accepted : 15-01-2021

**ABSTRACT**

All of Kambar's feminine characters were created on the basis of moral ethics. The purpose of this research paper is to highlight the high attributes of women like love, affection, division, chastity and sacrifice. This epic mentions about three less spoken women- Kosalai, Sumitrai and Mandotharai. The similarity is that these women are shown as substandard women, which still stands as an acceptable cultural standard for the women of the the present world.

**Keywords:** Kambar, Kosalai, Sumitrai, Mandotharai

## முன்னுரை

கம்பன் தான் படைத்த இராமவதாரத்தில் எண்ணற்றப் பெண் பாத்திரங்களைப் படைத்துள்ளான். எதிர்மறை கொண்ட கதாபாத்திரங்களில் ஓர் அறத்தினை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கும். கம்பனின் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட கதாபாத்திரங்கள் மூவர் தசரதனின் முதல் மனைவி கோசலை, மூன்றாம் மனைவி சுமித்ரை, இராவணனின் மனைவி மண்டோதரி. இம்மூன்று பெண்களுமே இரக்கத்திற்குரியவர்கள். தாங்கள் துன்பத்தில் உழன்ற போதிலும் பண்பில் குறையாத சூடாமணியாக அறம் தவறாத மேன்மக்களாக விளங்கினார்கள். அவர்களின் அறப்பண்பினை எங்ஙனம் கம்பன் தன் காப்பியத்தில் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை ஆய்வுக் கட்டுரை வழி எடுத்துரைக்கப்படுகிறது (Gnanasampanthan, 2017; Sirpi Balasubramaniam, 2002; Ismail, 1981).

## கோசலை

தசரதனின் முதல் மனைவியாக, முதல் தேவியாக அயோத்தி புகுந்த பெண். கணவனின் அன்பை முழுவதும் பெறுவதில் எப்போதும் இரண்டாமிடம் தான். போகட்டும்

கோசலை பெற்றெடுத்த மகன் இராமன் முடிசூடி வருவான் என்று நினைத்திருந்தால். அவனோ தந்தையின் சொல்லை ஏற்று பதினான்கு ஆண்டுகள் கனாகம் சென்றுவிட்டான்.

பெற்றெடுத்த மகனைக் காட்டிலும் மேலான மகன் பரதன் நந்தியம்பதியில் தினம்படும் துயரங்களைக் கண்டு அவன் நிலைக்கு வருந்தி நொந்தாள் என்றாலும் பலனை எதிர்நோக்காத கர்மயோகியாக வாழ்ந்தாள்.

தன் மகனுக்கு வரவிருந்த வாய்ப்பு தட்டிப் பறிக்கப்பட்ட நிலையிலும், “நிறை குணத்தவன் நின்னினும் நல்லனால் குறைவு இலன்” என்று இராமனைக் காட்டிலும் பரதனைப் பாராட்டுகிறாள்.

இராமன் முடிபுனைதலைத் தடுத்தவளும், அவனைக் காடேறுமாறு செய்தவளும் கைகேயிதான் என்பதை அறிந்த பின்னரும் ஒருமுறை கூட கடுஞ்சொல் சொல்லவில்லை.

வெல்ல முடியாத வீரம் உடைய தசரதனின் மரணம் தான் பெற்ற பிள்ளையாலே, மாண்டுவிட்டான் என்று புலம்புவதிலிருந்து கணவன் மேல்கொண்ட அன்பினைப் புலப்படுத்துவதாக அமைகிறது.

## சுமித்ரை

குழந்தை பெறுவதால் ஒருத்தி தாயாகி விடமுடியாது. தியாகமும், தன்னலமற்ற சேவையும் இணைகின்ற போதுதான் தாய்மை உருவாகின்றது என்பதற்கு சிறந்த உதாரணம் ‘சுமித்ரை’ என்ற கதாபாத்திரம்.

சுமித்ரை இராமனுக்குத் தன் மகனையே தந்தவள். கம்பன் தன் காப்பியத்தில் ஒவ்வொரு திருப்பத்தையும் பெண்களே உருவாக்குகின்ற நிலையில் அமைத்துள்ளான் என்று சிறப்பு.

சுமித்ரை கதாபாத்திரம் கதை வளர்ச்சிக்கு துணை நின்ற பாத்திரமாக, இராமனின் குணநலன்களை புலப்படுத்திய பாத்திரமாக, தாய் என்ற சொல்லை விட உயர்ந்தவளாக, எடைகளை ஏமாற்றும் கனமுள்ள நெஞ்சினளாக, கம்பனைக் கவர்ந்தவளாக, நம்மால் நேசிக்கப்படத்தக்கவளாக, வாசிக்கப்பட வேண்டியவளாக யாசிக்கத்தக்க குணமுடையவளாக இப்பாத்திரப்படைப்பு விளங்குகிறது.

## மண்டோதரி

மண்டோதரி நான்கு இடங்களில் பேசப்படுகிறாள். கம்பன், மண்டோதரியின் அழகை தேவமகளிர் அழகொடு ஒப்பிடுகிறான். தேவமாதர் அவளுக்கிரு ஏவல் செய்யும் உயர்வையும் காட்டி, அவள் கணவனை, தன் மகனை இழந்தபின், அவளின் புலம்பல்களை காட்டி நம்மை புலம்ப வைக்கிறார்.

அனுமன் காண்கின்ற போது மண்டோதரி மஞ்சத்தில் படித்திருக்கிறாள். அவள் மேனி ஒளி பிறஒளிகளைக் குன்றச் செய்தனவாம். மஞ்சத்தில் துயில் கொள்ளும் காட்சி கம்பன் இரு இடங்களில் காட்டுகிறார். ஒன்று கைகேயி, மற்றொன்று கதாபாத்திரம் மண்டோதரி.

இராவணன் மேல் மண்டோதரி கொண்டிருந்த கணவன் பக்தியை வெளிப்படுத்துகிறார். “நினைத்தும் மறந்தும் இல்லாத நெஞ்சினள்” என்று கணவன் இறக்கும் முன் தான் இறக்க வேண்டும் என்று விழைகிறாள். இராவணனின் உடலைக் கையில் தாங்கி, அழைத்து உயர்ந்த உயிர் நீங்கிய மண்டோதரி கற்புத் தெய்வமாகவே போற்றுகிறார். மண்டோதரியின் தெய்வத்தன்மையை மாணக்கவாசகர் தம் திருவாசகத்தில் பாராட்டுகிறார்.

## முடிவுரை

இவ்வாய்வுக் கட்டுரையில் காட்டப்பட்ட மூன்று பெண்களும் மனைவியாக தாயாக, கற்புக்கரசியாக வாழ்ந்து மாந்தர்குல மாணிக்கங்களாக ஒளிர்ந்து பிற பெண்களுக்கு வழிகாட்டும் பெண்ணறத்தினர்களாகத் திகழ்ந்தனர்.

## பார்வை நூல்கள்

Gnanasampanthan, A.S., (2017) Arasiyar Moovar, Gangai Puthaga Nilayam, Chennai, India.

Ismail, M.M., (1981) Nayathakka Nagareegam, Vanathi Pathipagam, Chennai, India.

Sirpi Balasubramaniam, (2002) Kambanil Manudam, Vanathi Pathipagam, Chennai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License